**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 12 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -திரு.பாலசுப்பிரமணியம் **PW-6** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

**(எதிரி ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது அம்மாபேட்டை காவல் நிலையம் நெடுஞ்சாலை ரோந்து சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.09.2020 அன்று நான் சித்தோடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்த சமயம் மேற்படி காலை 11.15 மணி அளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்து சமயம் சந்திரசேகரன் தகப்பன் பெயர் லோகநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் புகாரின் தன்மைக்கு ஏற்றவாறு நிலைய குற்ற எண் 669/2020 இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவுகள் 279, 337 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3.** அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் மற்ற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலைவிசாரணைக்காக சித்தோடு காவல் உதவி ஆய்வாளர் சஞ்ஜீவமூர்த்தி என்பவருக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

முதல் தகவல் அறிக்கை 15-வது காலத்தில் முதல் தகவல் அறிக்கை எப்பொழுது நீதிமன்றத்திற்கு அனுப்பபப்பட்டது என்ற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல

குறிப்பிட்டுள்ளேன். புகாரானது காவலர் சொல்ல சொல்ல புகார்தாரர்களால் எழுதப்பட்டது என்றால் அவர் ஏற்கனவே எழுதிக் கொண்டு வந்தார். நான் சொன்ன நேரத்தில் சொல்லவாரு புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை எதுவும் நான் சொன்னது போல் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**